**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வழங்கும் அனைத்து சலுகைகளையும் பெற்று பயனடையும் வகையில் பொது சேவை மையங்களின் இணையதள வழியாக இ–சேவை மையம் மூலம் விண்ணப்பிக்க வசதிகள் ஏற்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கி– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண். 39

நாள்:08–12–2016
துன்முகி, கார்த்திகை 23,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. மானியக் கோரிக்கை எண்.52, 2016–17 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பு நாள் 10–08–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.4101/இவாததி/2015, நாள் 16.08.2016.

–––––––

**<u>ஆணை:</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களால் 10.08.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

"மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்குதல், கல்வி உதவித் தொகை, பராமரிப்பு உதவித் தொகை போன்ற திட்டங்கள் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** 2016–2017 ஆம் நிதியாண்டிலிருந்து மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் பொது இ–சேவை மையம் ஆரம்பிக்கப்படும். விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்டு பொது சேவை மையங்களின் இணையதள வழி மூலம் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான சேவை ரசீது எண், ஒப்புகைச் சீட்டு உதவி வழங்கப்படும் உத்தேச நாள் போன்ற விவரங்கள் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும். மாவட்ட மின்னணு முறை திட்டத்தின் மூலம் பெறப்பட்ட விண்ணப்பமானது அந்தந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் / மருத்துவ அலுவலர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டு பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் விரைந்து வழங்கப்படும். இம்முறையின் மூலம் மாவட்ட ஆட்சியர் உட்பட அனைத்து நிலைகளிலும் வெளிப்படையாக துரிதமாக பணிகள் நடைபெறவும், கண்காணிப்பினை மேம்பட செய்திடவும் வழிவகை செய்கிறது.

இந்தமுறையால் மாற்றுத் திறனாளிகள் மாவட்ட தலைமையிடம் செல்வதை தவிர்த்து அவர்களது அருகில் உள்ள பொது இ–சேவை மையங்களில் விண்ணப்பிக்கவும், தங்களின் விண்ணப்பத்தின் தற்போதைய நிலையினை அறிந்திடவும் இயலும்.''

**2.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வழங்கும் அனைத்து சலுகைகளையும் பெறத் தேவையான அடிப்படை ஆவணம், மருத்துவ சான்றிதழுடன் கூடிய அடையாள அட்டையாகும் எனவும், இந்த அடையாள அட்டை பெறுவதற்கு மாற்றுத் திறனாளிகள் அவர்கள் இருப்பிடத்திலிருந்து மருத்துவமனை, மாவட்ட மறுவாழ்வு அலுவலகம் அல்லது முகாம்கள் என பல்வேறு இடங்களுக்கு பலமுறை சென்று சிரமம் அடைவதை தவிர்க்கும் பொருட்டும், அடையாள அட்டையை பெறுவதற்கு இந்த முறையில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu E-Governance agency) மூலம் ஒவ்வொரு பஞ்சாயத்து அளவில் உள்ள பொது சேவை மையங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம் என்றும், தேவையான மருத்துவச் சான்றுகள் அரசு ஆரம்ப சுகாதார மையங்களின் மருத்துவர் மூலம் பெறலாம் எனவும், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் தகுதியுடைய நபர்களுக்கு அன்றைய தினத்திலேயே Digital Signature மூலம் ஏற்பளித்து, தகுதியுடைய நபர்கள் தாங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலேயே Online மூலம் அடையாள அட்டையை பெறும் முறையினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும், இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும், மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவித் தொகை வழங்கும் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், பஞ்சாயத்து அளவில் உள்ள பொது இ–சேவை மையத்தின் மூலம் விண்ணப்பித்து, விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான சேவை ரசீது எண். ஒப்புகைச் சீட்டு உதவி வழங்கப்படும் உத்தேச நாள் போன்ற விவரங்களை விண்ணப்பதாரர் பெற்றுக் கொள்ளவும், இத்திட்டத்தை செலவினம் ஏதும் இல்லாமல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu E-Governance Agency) மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் மூலம் செயல்படுத்திட அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3. 2016–17** ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்கள் அறிவித்த அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வழங்கும் அனைத்து சலுகைகளையும் பெற மாற்றுத் திறனாளிகள் பொது இ–சேவை மையங்களில் இணையதள வழியாக மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவித் திட்டம், கல்வி உதவித் தொகை வழங்குதல் மற்றும் உதவி உபகரணங்கள் வழங்குதல் ஆகிய திட்டங்களுக்கு விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கும் முறையை மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மூலம் செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள் (மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**
நிதி(சந)த் துறை, சென்னை–9.
தகவல் தொழில் நுட்பவியல் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.